RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 23 ஜனவரி.30 2026 வெள்ளிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# மக்களவையில் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் 2027 நிதி ஆண்டின் வளர்ச்சி 7.2% ஆக இருக்கும் என கணிப்பு

புதுடெல்லி: ஜன.30-

2025-26ம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மக்களவையில் இன்று தாக்கல் செய்தார். 2027 நிதி ஆண்டில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 6.8% முதல் 7.2% வரை இருக்கும் என்று அதில் கணிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் கூட்டத்தொடரில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக நிதி அமைச்சகம் சார்பில் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படுவது வழக்கம். நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள பொருளாதார விவகாரங்கள் துறையின் பொருளாதார பிரிவு இந்த ஆய்வறிக்கையை தயாரிக்கும். கடந்த ஆண்டில், இந்திய பொருளாதாரம் எவ்வாறு செயல்பட்டது என்பது குறித்த விரிவான பார்வையை இந்த ஆய்வறிக்கை வழங்கும்.

அந்த அடிப்படையில், 202526ம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்தார். இதையடுத்துப் பேசிய சபாநாயகர் ஓம்



பிர்லா, பொருளாதார ஆய்வறிக்கையின் நகல், அனைத்து உறுப்பினர்களின் வாட்ஸ்அப் எண்ணுக்கு அனுப்பப்படும் என கூறினார்.

பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விவரங்கள்: உலகப் பொருளாதார நிலைமைகள் நிச்சயமற்றதாகவும் நிலையற்றதாகவும் உள்ளது. என்ற போதிலும், இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார நிலை தொடர்ந்து நேர்மறையாகவே உள்ளது. உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளால் அபாயங்கள் அதிகமாக இருந்தாலும், பல நாடுகளின் பொருளாதாரங்களோடு ஒப்பிடும்போது இந்தியாவின் வளர்ச்சி எதிர்பார்த்ததைவிட சிறப்பாக உள்ளது.

எனவே, 2026 27 நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி 7.4% ஆக இருக்கும் என்றும், 202728 நிதி ஆண்டில் இது 6.8% முதல் 7.2% வரை இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டின் வளர்ச்சி 7.4 ஆக இருக்கும் என்று ஏற்கனவே கணிக்கப்பட்ட நிலையில், சர்வதேச நாணய நிதியம் 7.3% ஆக இருக்கும் என்றும், உலக வங்கி 7.2% ஆக இருக்கும் என்றும் கணித்துள்ளன. இது நிதி அமைச்சகத்தின் முந்தைய கணிப்போடு ஒத்துப்போகிறது.

உள்நாட்டுத் தேவையே இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையான உந்துசக்தியாகத் திகழ்கிறது. குறிப்பாக, நகர்ப்புறங்களில் நிலவும் வலுவான நுகர்வோர் தேவை, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்துள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வரிச் சீரமைப்பு நடவடிக்கைகள் நகர்ப்பற நுகர்வில் முன்னேற்றத்துக்கு பங்களித்துள்ளது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிப் பாதை வலுவாக உள்ள போதிலும், உலகளாவிய அதிர்ச்சிகளின் தாக்கம் தாமதமாக வெளிப்படக்கூடும் என்பதால், கொள்கை வகுப்பாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 41 குடும்பங்களை அனாதையாக்கி விட்டார் : விஜய் மீது கடும் விமர்சனத்தை முன்வைத்த எடப்பாடி பழனிசாமி!!

சேலம், ஜன.30.-

அதிமுகவில் ஓ.பன்னீர்செல்வத்தை மீண்டும் சேர்க்க வாய்ப்பே இல்லை என்று எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். அதிமுகவில் இணைக்க டிடிவி எடப்பாடியிடம் பரிந்துரைக்க வேண்டும் என்றும் ஒன்றிணைப்புக்கு நான் தயார், எடப்பாடி தயாரா என்றும் ஓ.பன்னீர்செல்வம் பேசியிருந்தார். இந்த நிலையில் சேலத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "கூட்டணி விவகாரத்தில் அதிமுக மிக தெளிவாக செயல்பட்டு வருகிறது. இன்னும் சில கட்சிகளுடன் பேசி வருகிறோம்; அது இறுதியான பின் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவோம். அதிமுக பொதுக்குழுவில் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டு, ஓபிஎஸ் அதிமுகவின் அடிப்படை உறுப்பினராக இருந்து நீக்கப்பட்டுவிட்டார். நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.



அதனால் அதிமுகவில் அவரை சேர்ப்பதற்கு வாய்ப்பே இல்லை. முறையாக திட்டமிடாததால்தான் கரூரில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். நடிகர் என்றால் கூட்டம் வரத்தான் செய்யும். 41 உயிர்கள் பறிபோய் இருக்கிறது. அவரைப் பார்க்க வந்ததால் தான் இறந்தார்கள். விஜய் சிறந்த நடிகர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் சிறந்த அரசியல் கட்சி நாங்கள்தான். நாங்கள்தான் இதுவரை மக்களுக்கு சேவை செய்கிறோம், குரல் கொடுக்கிறோம். எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்ததாக விஜய் சொல்கிறார்?. யாருக்காக அதை விட்டுவிட்டு வந்தார்?. கட்சி வேறுபாடுகள் பார்க்காமல் நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களை சந்தித்து ஆறுதல் கூறினோம். அரசியல் பகுப்பாய்வு

அரசாங்கம் நடத்த அனுபவம் இருக்க வேண்டும். எனக்கு அரசியலில் 51 ஆண்டுகள் அனுபவம் உள்ளது. அரசியல் என்று வந்துவிட்டால் மக்களை நேரில் சென்று சந்திக்க வேண்டும். கரூர் துயர சம்பவத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்காத விஜய் ஒரு தலைவரா?. அவர்களுக்கு ஆறுதல்கூட தெரிவிக்க முடியவில்லை, கட்சி நடத்தி என்ன செய்வது?. கரூர் நெரிசலில் உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களை விஜய் அனாதையாக்கிவிட்டார்." இவ்வாறு தெரிவித்தார்

## "ஐரோப்பிய சந்தையை ஆக்கிரமியுங்கள்" இந்திய நிறுவனங்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு!

டெல்லி, ஜன.30-

உலகத் தரத்திலான பொருட்களை உற்பத்தி செய்து, ஐரோப்பியச் சந்தையை இந்தியத் தயாரிப்புகளால் ஆக்கிரமிக்க வேண்டும் என்று நிறுவனங்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கியுள்ள நிலையில், இன்று (ஜனவரி 29) நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் நரேந்திர மோடி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இடையே சமீபத்தில் கையெழுத்தான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த



தகவல்களை அவர் பகிர்ந்து கொண்டார்.

இந்த ஒப்பந்தத்தை 'அனைத்து ஒப்பந்தங்களின் தாய்' என்று குறிப்பிட்ட பிரதமர், இது இந்தியத் தொழில் துறையினருக்குக் கிடைத்துள்ள ஒரு மிகப்பெரிய மைல்கல் என்று குறிப்பிட்டார். "ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளிலும் இப்போது இந்தியத் தயாரிப்புகளுக்கான கதவுகள் அகலத் திறக்கப்பட்டுள்ளன. இந்திய உற்பத்தியாளர்கள் இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உலகத் தரத்திலான பொருட்களை உற்பத்தி செய்து, ஐரோப்பியச் சந்தையை இந்தியத் தயாரிப்புகளால் ஆக்கிரமிக்க வேண்டும்." என்று அவர் இந்தியத் தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும், நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரை, 140 கோடி இந்தியர்களின் நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது என்றும் இந்தியாவின் இளைஞர் சக்தியின் விருப்பங்களை அந்த உரை மிகச் சரியாக வெளிப்படுத்தியுள்ளது என்றும் பிரதமர் மோடி பாராட்டினார்.

பட்ஜெட் கூட்டத்தொடர் என்பது ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கான தளம் என்று குறிப்பிட்ட பிரதமர், எதிர்க்கட்சிகள் இதில் இடையூறுகளை உருவாக்குவதை விட்டுவிட்டு, தீர்வுகளைக் காண்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவின் உரையுடன் நேற்று தொடங்கியது. இது வரும் பிப்ரவரி 13ம் தேதி நடைபெற உள்ளது. வரும் பிப்.1 ஞாயிறு அன்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நடப்பு ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்க செய்ய உள்ளார்.

## 'நெல்லை தொகுதியில் மீண்டும் போட்டி' நயினார் நாகேந்திரன் சூசகம்

திருநெல்வேலி, ஜன.30.-

"என்னையும் திருநெல்வேலி தொகுதி மக்களையும் பிரித்து பார்க்க முடியாது. 2026ல் திருநெல்வேலி தொகுதி பாஜகவின் பட்டியலில் இடம்பெறும்" என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார். இதன்மூலம் திருநெல்வேலி தொகுதியில் மீண்டும் அவர் போட்டியிடுவதை சூசகமாக குறிப்பிட்டுள்ளார்.

திருநெல்வேலி தச்சநல்லூரில் ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் சட்டப்பேரவை தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் அமைக்கப்பட்டுள்ள புதிய உயர்மின் கோபுரத்தை திறந்து வைத்த அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: "தேசிய ஜனநாயக கூட்டணிக்கு இன்னும் பல கட்சிகள் வருவதற்கு வாய்ப்புள்ளது. தேமுதிக தனது நிலைப்பாட்டை வரும் 3ம் தேதி அறிவிப்பதாக தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் தினசரி ஒரு கொலை நடந்து வருகிறது. வட மாநிலத்தவர்களுக்கு எதிராகவும் பெண்களுக்கு எதிராகவும் பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. தமிழகத்தில் அதிகமான கொலை



சம்பவங்கள் நடந்து வருவதற்கு முதல் காரணமே கஞ்சா புழக்கம்தான். ஆனால், அதைப் பற்றி தமிழக முதல்வர் எதையும் பேசாமல் வாக்குக்காக மகளிர் மாநாடு நடத்தி வருகிறார்.

திமுக மகளிர் மாநாட்டில் குக்கர், ஹாட் பாக்சில் பிரியாணி என அனைத்தையும் வைத்து ஆள் பிடித்துக் கொண்டு சென்று கூட்டத்தை நடத்தி வருகிறார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்து அமைச்சர்களையும் கசங்கி பிழிந்து, கெடுபிடி வசூல் செய்து உதயநிதி ஸ்டாலினும், கனிமொழியும் கூட்டத்தை நடத்தி வருவதாக செய்திகள் வெளியாகி வருகிறது.

மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருந்த தமிழகம் தற்போதைய முதல்வரால் வாழ தகுதி இல்லாத இடமாக மாறி விட்டது. கஞ்சா விற்பதை தடுப்பதற்கு தமிழக காவல் துறையும் அரசும் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? கஞ்சா விற்பவர்களை பாதுகாப்பதற்காக காவல் துறை செயல்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. தமிழகத்தில் கஞ்சா விற்பனை செய்பவர்களையும், போதைப் பொருட்கள் விற்பனை செய்பவர்களையும் கட்டுப்படுத்த காவல் துறை ஏன் தயங்குகிறது?

காவல் துறையின் ஈரல் கெட்டு விட்டதாக கருணாநிதி சொல்லி வந்தார். ஆனால் இப்போது காவல் துறைக்கு ஈரல் இருப்பதாகவே தெரியவில்லை.

இரட்டை இன்ஜின் சர்க்கார் என்றால், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுவதுதான். அதையே டபுள் இன்ஜின் சர்க்கார் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் தமிழக மக்கள் உள்ளிட்ட பல மாநில மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். ஆனால் தமிழகத்தில் மத்திய அரசு திட்டங்களுக்கு முதல்வர் புகைப்படத்தை போட்டு விளம்பரம் தேடி, தாங்கள் செய்வதைப் போல் சொல்லி வருகிறார்கள். தமிழகத்துக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், சாலைகள், பாலங்கள், ரயில்வே விமான நிலையங்கள் போன்றவை அமைப்பதற்கும் ரூ.14 லட்சம் கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது. ஆனால் மத்திய அரசு எதையும் தரவில்லை என்று திமுக கூறி வருகிறது.

ஓபிஎஸ் கூட்டணி நிலைப்பாடு தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகிறார். நல்லவர்கள் எல்லோரும் எங்களோடு தான் வருவார்கள். ஓபிஎஸ்ஸூம் நல்லவர்தான். இதுவரை கூட்டணியில் இணைவதற்கு ஓபிஎஸ்சிடம் எதுவும் பேசவில்லை. தேவைப்பட்டால் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

நாட்டில் பெரும்பாலான மாநிலங்களில் பாஜக ஆட்சி நடந்து வருகிறது. எங்கும் மோசமான ஆட்சி நடைபெறுவதாக தகவல்கள் இல்லை. திமுக ஆட்சி செய்து தமிழகத்தை மோசமாக்கிவிட்டதாக நான் வெளிப்படையாகவே குற்றம் சாட்டுகிறேன். பாஜக கூட்டணி ஆட்சி தமிழகத்தில் அமைந்தால் மத்திய அரசின் கூடுதல் நிதியை தமிழகத்துக்குப் பெற்றுத் தருவோம். அனைத்து விதமான குற்றங்களையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

கடந்த 2001, 2006, 2011, 2016 மற்றும் 2021 ல் திருநெல்வேலி தொகுதியில் போட்டியிட்டுள்ளேன். திருநெல்வேலி தொகுதி மக்கள் எனது உடன்பிறந்த சகோதரர்களை போன்றவர்கள். என்னை அவர்களின் வீட்டில் ஒரு பிள்ளையாக பார்க்கிறார்கள். எப்போதும் என்னையும் திருநெல்வேலி தொகுதி மக்களையும் பிரித்து பார்க்க முடியாது. 2026ல் திருநெல்வேலி தொகுதி பாஜகவின் பட்டியலில் இடம்பெறும்.

பாஜக ஆட்சி நடத்தும் மாநிலங்களிலோ, மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளிலோ பாஜகவின் சித்தாந்தத்தால் என்ன பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பது தெரியவில்லை. எதை வைத்து முதல்வர் இப்படி சொல்லிவருகிறார் என்பது புரியவில்லை. தேசிய ஜனநாயக கூட்டணியில் நல்லவர்கள் இடம்பெறுவார்கள் நாட்டு மக்கள் நல்ல பயனடைவார்கள். 2026 ல் தேசிய ஜனநாயக கூட்டணி தமிழகத்தில் ஆட்சி அமைக்கும்" என்று தெரிவித்தார்.

"யார் யாரெல்லாம் நல்லவர்கள் என்பது அடுத்தடுத்து தெரியவரும்" என சசிகலா கூட்டணியில் இணைவாரா என்ற கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

## மும்பையில் 4 வழி மேம்பாலம் திடீரென 2 வழியாக மாறும் புகைப்படம் 'ஆபத்து இல்லை' என எம்எம்ஆர்டிஏ விளக்கம்

மும்பை: ஜன.30-

மகாராஷ்டிர மாநிலம் மும்பை அருகே மீரா பயந்தர் பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலம் 4 வழிகளில் இருந்து திடீரென 2 வழிகளாக குறுகிச் செல்வது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளங்களில் பரவி பொதுமக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதையடுத்து, இந்த மேம்பால கட்டமைப்பில் எந்தவித வடிவமைப்பு குறைபாடும் இல்லை. அதேபோன்று ஆபத்தும் இல்லை என்று மும்பை பெருநகர பிராந்திய மேம்பாட்டு ஆணையம் (எம்எம்ஆர்டிஏ) விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து அந்த ஆணையத்தின் அதிகாரிகள் கூறுகையில், "மேம்பாலத்தின் தற்போதைய வடிவமைப்பு என்பது இடவசதி மற்றும் எதிர்கால விரிவாக்க திட்



டங்களை அடிப்படையாகக் கொண்டது. பயந்தர் (கிழக்கு) நோக்கி இரண்டு வழிகள் அமைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் பயந்தர் (மேற்கு) பகுதியை இணைக்க கூடுதலாக இரண்டு வழிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ரயில்வே வழித்தடத்தைக் கடந்து பாலத்தை நீட்டிக்கும்போது இந்தச் சிக்கல் சரியாகிவிடும்" என்றனர்.

அதிகாரிகளின் இந்த பதிலை சமூக ஆர்வலர் அஞ்சலி தமானியா நிராகரித்துள்ளார். "கடந்த 2022ல் டாடா குழுமத்தின் முன்னாள் தலைவர் சைரஸ் மிஸ்திரி உயிரிழந்ததற்கு பாலத்தின் தவறான வடிவமைப்பே காரணம். அதே தவறை எம்எம்ஆர்டிஏ மீண்டும் செய்கிறது" என்று தமானியா குற்றம்சாட்டியுள்ளார்.

வழக்கறிஞர் கிருஷ்ணா குப்தா கூறுகையில், "பொதுமக்கள் உயிருடன் அதிகாரிகள் விளையாடுகிறார்கள். தரமற்ற பணிகளுக்காக முன்பு கருப்புப் பட்டியலில் வைக்கப்பட்ட நிறுவனம் இப்போதும் பணிகளை மேற்கொண்டு வருகிறது" என்றார்.

# ஏஐ நோக்கி நகரும் பெருநிறுவனங்கள்: 16,000 ஊழியர்களை நீக்கும் அமேசான்!




சென்னை, ஜன.30.-
உலகின் மிகப்பெரிய இகாமர்ஸ் நிறுவனமான அமேசான், தனது கார்ப்பரேட் பிரிவில் பணியாற்றும் 16,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களில் அந்நிறுவனம் மேற்கொள்ளும் இரண்டாவது பெரிய பணிநீக்கம் இதுவாகும்.

அமேசான் நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் பெத் காலெட்டி, இது குறித்து வெளியிட்ட பதிவில், “நிறுவனத்தின் படிநிலைகளைக் குறைக்கவும், அதிகாரத்துவத்தைக் களைந்து உரிமையை அதிகரிக்கவும் இந்த மாற்றங்கள் செய்யப்படுகின்றன” என்று குறிப்பிட்டுள்ளார்.

அமேசான் ஏற்கனவே கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 14,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்திருந்தது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 16,000 இடங்களுடன் சேர்த்து, 2023ம் ஆண்டிற்குப் பிறகு அமேசான் மேற்கொள்ளும் மிகப்பெரிய ஆட்குறைப்பு நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

கரோனா பேரிடர் காலத்தில் ஆன்லைன் வர்த்தகம் அதிகரித்தபோது, அமேசான் தனது பணியாளர்களின் எண்ணிக்கையை இருமடங்காக உயர்த்தியது. தற்போது நிலைமை சீராகியுள்ளதாலும், ஏஐ தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியாலும், கூடுதல் பணியாளர்களின் தேவை குறைந்துள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. அமேசான் சிஇஓ ஆண்டி ஜாசி, கடந்த ஜூன் மாதமே “வரும் ஆண்டுகளில் ஏஐ தொழில்நுட்பம் கார்ப்பரேட் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்” என்று எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்குப் புதிய வேலை தேடிக்கொள்ள 90 நாட்கள் அவகாசம் வழங்கப்படும் என்றும், அப்படி கிடைக்காதபட்சத்தில் அவர்களுக்குப் பணிநீக்கக் கால ஊதியம் மற்றும் மருத்துவக் காப்பீடு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், எந்தெந்த நாடுகளில் இந்தப் பணிநீக்கம் அதிகம் இருக்கும் என்பது குறித்த தெளிவான விவரங்களை அமேசான் இன்னும் வெளியிடவில்லை. இந்தியாவில் உள்ள அமேசான் அலுவலகங்களும் இதில் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

இதேபோல், பின்டரெஸ்ட் மற்றும் யுபிஎஸ் போன்ற மற்ற முன்னணி நிறுவனங்களும் ஏஐ தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ஆயிரக்கணக்கான ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து வருவது மென்பொருள் நிறுவன ஊழியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



# பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரியில் மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் விழா

திண்டுக்கல், ஜன.30-
திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக முதல்வர் ஸ்டாலின் துவங்கி வைத்த ‘உலகம் உங்கள் கையில்’ திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது அதன் ஒரு பகுதியாக பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரியில் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் தலைமையில் இலவச மடிக்கணினி வழங்கும் விழா நடைபெற்றது இவ்விழாவில் மாணவ மாணவிகளிடம். இந்தத் திட்டம் மாணவர்களின் டிஜிட்டல் கல்வி, மென்பொருள் மேம்பாடு, தரவு உள்ளீடு மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ள உதவும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. என கூறினார். இந்நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் ரவிசங்கர் கோட்டாட்சியர். கோவில் அதிகாரிகள். வட்டாட்சியர் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.







■ அதிமுக துணை பொதுச்செயலாளர், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. முனுசாமி, கிருஷ்ணகிரி அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான அசோக் குமார் ஆகியோர் நமது மாலை தந்தி நாளிதழ் படித்துக் கொண்டிருந்த போது எடுத்த படம்.





## பள்ளி மாணவிகளுக்கு

# “குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள்” குறித்து விழிப்புணர்வு

தேனி ஜன.30-
தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹாப்ரியாஉத்தரவின் பேரில், கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .P.கலைக்கதிரவன் (CWC) வழிகாட்டிகளின்படி தேனி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் K.முத்துகுமார் தலைமையில், காவல் நிலைய தேனி காவல் ஆய்வாளர் S.ராமலட்சுமி, தேனிA-WPS காவல் நிலைய ஆய்வாளர் P.K.T.மங்கையர் திலகம் ஆகியோர்கள் தேனி NADAR VIDYALAYA HR.SEC. SCHOOL மாணவிகளுக்கும் மற்றும் வீரபாண்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் .விக்டோரியா லூர்து மேரி தலைமையில் வீரபாண்டி கோட்டூர் அரசு பள்ளி மாணவிகளுக்கும், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், குழந்தை திருமணம் மற்றும் குழந்தைகள் ஆபத்து காலங்களில் தங்களை தற்காத்துக் கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள், கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், ஆபத்துக் காலங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய (Child Helpline தொலைபேசி எண் 1098) மற்றும் காவல் உதவி செயலின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.






■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் கார்பன் உமிழ்வு குறைப்பு குறித்த பயிலரங்கம் இந்திய மாநில தொழில் வளர்ச்சி மற்றும் முதலீட்டு கழகங்களின் பேரவை தலைமை இயக்குநர் (COSID-ICI-J¡ Director General) ஹன்ஸ் ராஜ் வர்மா மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் பிரசன்ன பாலமுருகன், மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் முத்துராஜ், தொழில் பாதுகாப்பு துணை இயக்குநர் உமா பாரதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போராட்ட வழக்கில் 59 பேர் விடுதலை: மதுரை நீதிமன்றம் தீர்ப்பு



மதுரை, ஜன.30.-
அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போராட்ட வழக்கில் 59 பேரை விடுதலை செய்து மதுரை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழகத்தில் 2017ல் ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டது. இதை கண்டித்து சென்னை மெரினா கடற்கரையில் சமூக வலைதளங்கள் மூலமாக இளைஞர்கள் ஒன்றிணைந்து கடந்த 2017 ஜனவரி 8ல் போராட்டம் நடத்தினர். ஜனவரி 15ல் தடையை மீறி அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டது. இது போலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதனால் ஜல்லிக்கட்டு நடத்த வலியுறுத்தி இளைஞர்கள், பொதுமக்கள் இணைந்து போராட்டம் நடத்தினர்.

இதனைக் கலைக்க போலீஸார் தடியடி நடத்தினர். மறுநாள் காலை (ஜனவரி 16) இளைஞர்கள், பொதுமக்கள் ஒன்றிணைந்து தடையை நீக்கி ஜல்லிக்கட்டினை நடத்த வேண்டும் என விடிய, விடிய அலங்காநல்லூரில் போராட்டம் நடத்தினர். அலங்காநல்லூர் போராட்டத்திற்கு ஆதரவாக மெரினா கடற்கரையில் இளைஞர்கள் மீண்டும் திரண்டு (ஜனவரி 17) போராட்டம் நடத்தினர்.

பீட்டாவைத் தடை செய்ய வேண்டும், ஜல்லிக்கட்டிற்கான தடையை நிரந்தரமாக நீக்க வேண்டும் என போராட்டம் நடத்தினர். முதலில் ஆயிரக்கணக்கான இளைஞர்களுடன் தொடங்கிய இந்த போராட்டம் சமூக வலைதளங்கள் மூலமாக லட்சக்கணக்கான இளைஞர்களுடன் பெரும் போராட்டக்களமாக மாறியது.

இதையடுத்து ஜனவரி 21ல் ஜல்லிக்கட்டுக்கான அவசர சட்டத்தை தமிழக அரசு பிறப்பித்தது. அலங்காநல்லூரில் போராடிய 63 பேர் கைது செய்யப்படனர். இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது.

இதில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 200க்கும் மேற்பட்டோர் சேர்க்கப்பட்டனர். இந்த வழக்கு மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் 2018ம் ஆண்டு முதல் நடந்து வந்தது.

இந்த வழக்கின் இறுதி விசாரணை இன்று நடைபெறுது. விசாரணை முடிந்த நிலையில் 59 பேரை விடுதலை செய்து நீதிபதி ஜோசப் ஜாய் தீர்ப்பளித்தார். 4 பேர் மீதான வழக்கு தனியே நடைபெற்று வருகிறது.

# காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் மயக்க ஊசி செலுத்தி பெற்றோரை கொன்ற நர்ஸ் கைது

திருமலை, ஜன.30.-
காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்த தாய், தந்தையை மயக்க ஊசி செலுத்தி கொன்று நாடகமாடிய நர்ஸ் கைது செய்யப்பட்டார். தெலங்கானா மாநிலம் விகராபாத் மாவட்டம் யச்சாரம் கிராமத்தை சேர்ந்தவர் தசரத்(60). இவரது மனைவி லட்சுமி(55). இவர்களுக்கு 2 மகள்கள், ஒரு மகன் உள்ளனர். இரண்டாவது மகள் சுரேகா(26), தனியார் மருத்துவமனை நர்ஸ். இவருக்கு இன்ஸ்டாகிராம் மூலம் வாலிபருடன் பழக்கம் ஏற்பட்டு இருவரும் காதலித்துள்ளனர். ஆனால் காதலுக்கு சுரேகாவின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் மாப்பிள்ளை பார்ப்பதில் தீவிரம் காட்டினர். இதனால் சுரேகா ஆத்திரமடைந்தார்.

இந்நிலையில் கடந்த 24ம்தேதி வீட்டில் தனியாக இருந்த தாயிடம், `உனக்கு அடிக்கடி முதுகுவலி என்கிறாயே? இதனை சரிசெய்ய புதிய மருந்து வந்துள்ளது. இதனை ஊசியில் செலுத்திக்கொண்டால் சரியாகிவிடும்’ எனக்கூறி தான் கொண்டு வந்து அதிகளவு மயக்கம் உள்ள மருந்தை ஊசி மூலம் செலுத்தியுள்ளார். சிறிதுநேரத்தில் அவர் மயக்கமடைந்தார். அப்போது வெளியே சென்றிருந்த அவரது தந்தை வீடு திரும்பினார். அவரிடமும், `உனக்கு கால்வலி குணமாக மருந்து வாங்கி வந்துள்ளேன் என்று கூறி அவருக்கும் ஊசி செலுத்தியுள்ளார். அதிக வீரியம் கொண்ட மயக்க மருந்தை அதிகளவு செலுத்தியதால், சில மணி நேரத்தில் பெற்றோர் இருவரும் அடுத்தடுத்து இறந்துள்ளனர்.

அவர்கள் இறந்ததை உறுதிசெய்து கொண்ட சுரேகா, தனது அண்ணனுக்கு போன் செய்து பெற்றோருக்கு மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிட்டதாக நாடகமாடினார். ஆனால் சந்தேகமடைந்த அவரது அண்ணன், பந்த்வாரம் போலீசாருக்கு தகவல் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் சம்பவ இடம் வந்து விசாரணை நடத்தினர். அப்போது வீட்டுக்குள் 2 சிரஞ்சுகள் இருந்தது. அவற்றை கைப்பற்றி விசாரணை நடத்தினர். சுரேகாவிடம் நடத்திய விசாரணையில் தனது காதல் திருமணத்திற்கு தடையாக இருந்ததால் பெற்றோரை அதிக மயக்க மருந்து கொண்ட ஊசி செலுத்தியதாக ஒப்புக்கொண்டார். இதையடுத்து போலீசார் சுரேகாவை நேற்று இரவு கைது செய்தனர்

# செங்கல்பட்டு மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் கொட்டும் மழையில் மாவட்டக் கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் கழகத்தினர் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தினர்



செங்கல்பட்டு, ஜன.30-
செங்கல்பட்டு மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் கொட்டும் மழையில் மாவட்டக் கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் - கழகத்தினர் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தினர்.

செங்கல்பட்டு மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில்

மாவட்டக் கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் - கழகத்தினர் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தினர்.

செங்கல்பட்டு மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் பொதுக்கூட்டம் கிழக்கு தாம்பரம் வால்மீகி தெருவில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட மாணவர் அணிசெயலாளர் கார்த்திகேயன் மனோகர் தலைமை வகித்தார். தாம்பரம் மாநகர கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எம்.கூத்தன் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் தாம்பரம் மேற்கு பகுதி கழகச் செயலாளர் ஏ.கோபிநாதன், மாவட்டக் கழகப் பொருளாளர் பி.கே.பரசுராமன், பகுதி கழகச் செயலாளர்கள் தாம்பரம் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சேலையூர் ஜி.சங்கர், மாமன்ற உறுப்பினர் எம்.தேவேந்திரன்,

தாம்பரம் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் கோ.மனோகர், மாமன்ற உறுப்பினர் சி.சாய்கணேஷ், இ.சசீலா, என்.சாரதா, பி.ஜார்ஜ், எம்.கஜேந்திரமுத்து, திலகவதி சேகர், ஆர்.சதீஷ்குமார், கூட்டத்திற்கு மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் எம்.மணிகண்டன், ஆர்.டி.சீனுதனபால், பி.ஹரிஹரன், டி.அருண், எஸ்.மணிகண்டன், கே.அழகு என்கிற ராஜேஷ் கண்ணன், ஜி.பாபு, எஸ்.விஜய் என்கிற ஆகாஷ், டி.ஆன்டனி பிரபு, வி.லலித் என்கிற லட்சுமிபதி, ஆர்.பாபு, டி.ஆண்டோ தமிழ்செல்வன், எம்.இ.டி.ஜெய்கணேஷ், எல்.ஜெய்சுரேஷ், வேணு கார்த்திக், எம்.குமரன், டி.பிரபு, டி.விஷ்ணுவர்தன், கே.முத்துக்குமார், விஷ்ணுதேவ் என்கிற பாபு, ஆர்.சி.சுர்ஜித்குமார், வி.ஆர்.சீனிவாசன், டி.மணிகண்டன், எம்.மனோஜ், சி.மேகநாதன், டி.தினேஷ், பகுதி, ஒன்றிய, மாணவர் அணி செயலாளர்கள் சி.லோகேஷ்வரன், எஸ்.தமீம் அன்சாரி, ஆர்.மிர்துன் ஜெயன், எஸ்.அப்பு தீபக் ராஜ், எச்.அஜீத், டி.அஜீத்குமார், ஜி.ராஜா, ஏ.குணசேகரன், ஏ.யோகேஷ்வர், டி.ரமேண், ஆர்.பிரித்திவிராஜன், எம்.பொன்.தர்மராஜ், வி.ஸ்ரீதர், ஜி.தினேஷ்குமார், எஸ்.சுந்தரகுமரன், சி.கோட்டீஸ்வரன், ஜி.ரமேஷ், ராஜி என்கிற யுவராஜ், எல்.என்.ஜவகர், எம்.விக்னேஷ், சி.பிரசாத், கே.மணிகண்டன், எஸ்.மணிகண்டன், கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன், கழக இளம் பேச்சாளர் ஆர்.டெல்ஜின், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் புலவர் ந.ராஜகோபால், பி.பஞ்சாட்சரம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அதனை மொழிப்போர் தியாகிகளுக்கு கழகத்தினர், பொதுமக்கள் வீரவணக்கம் செலுத்தினர்.

மேலும் இக்கூட்டத்தில் கழக மகளிர் அணி இணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கணிதா சம்பத், மாவட்டக் கழக துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏ.எம்.பொன்னுசாமி, பொதுக்குழு உறுப்பினர் கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் மண்டல அண்ணா தொழிற்சங்க செயலாளர் ஆர்.வேணுகோபால், மற்றும் பகுதி, ஒன்றிய, நகரக் கழகச் செயலாளர்கள் பா.அப்பு என்கிற வெங்கடேசன், த.ஜெயப்பிரகாஷ், வழக்கறிஞர் குரோம்பேட் எம்.கே.சதீஷ், ஆர்.அருணாசலம், இ.சம்பத்குமார், எம்.கஜா என்கிற கஜேந்திரன், ஞா.சந்திரசேகர்ராஜா, மாவட்ட அணி செயலாளர்கள் பா.இராஜப்பா, ஜி.எஸ்.புருஷோத்தமன், ஏ.எஸ்.சிவக்குமார், கஸ்தூரி தசரதன், பி.ஆர்.எஸ்.சரவணராஜ், சி.ஆர்.விநாயகம், ஜி.இன்பராஜ், தா.முகுந்தன், டாக்டர் பாலாஜி ஸ்ரீகாந்த், கே.பி.காசிராஜபாண்டியன், கிச்சா என்கிற கிருஷ்ணமூர்த்தி, ஆர்.சங்கர்கணேஷ், ஆர்.கனி என்கிற கணேஷ், மாமன்ற உறுப்பினர் வாட்டர் ராஜ், மாவட்ட அணி நிர்வாகிகள் கே.மாணிக்கம், வி.கே.பி.நாராயணன், கே.சேகர், ஏ.வி.சம்பத்குமார், ஆர்.சி.சேகர், எஸ்.மாரி, டி.டீ.தில்லைராஜ், வி.சரவணன், சீனு என்கிற கோவிந்தராஜ், சி.சுபாஷினி, ஏ.பத்மா, எஸ்.லதா, பி.ஜி.ராஜ்குமார், என்.ராமன், பகுதி நிர்வாகிகள் பா.வெங்கட்ராமன், எம்.பாலகணேஷ், பி.மோகன்ராஜ், தாம்பரம் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் டி.பாலாஜி, கே.கே.சரவணன், ஏ.அப்துல் மஜீத், எஸ். கோட்டைச்சாமி, ஏ.கே.வி.ஜீவன் ஜீவா, எஸ்.பொன்னுசாமி, எம்.வசந்த், சி.கந்தன், கே.கிருஷ்ணமூர்த்தி, வி.கோபால் மற்றும் மாவட்ட, பகுதி, ஒன்றிய, அணி நிர்வாகிகள், வட்டக் கழக, கிளைக் கழக நிர்வாகிகள் உட்பட திரளான கழகத்தினர் கலந்துகொண்டனர்.




## தென்காசியில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழாவினை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி வைத்தார்

தென்காசி, ஜன.30-

தென்காசி புதிய பேருந்து நிலைய பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், நெடுஞ்சாலைத்துறை சார்பில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழாவினை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில், தென்காசி மாவட்டத்தில் தென்காசி நெடுஞ் சாலைத்துறை மூலம் தேசிய சாலைப் பாதுகாப்பு மாதத்தினை முன்னிட்டு பொதுமக்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக தென்காசி இ.சி.ஈ.அரசு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தேசிய மாணவர் படை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி தென்காசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வீட்டுவசதி வாரிய குடியிருப்பு வழியாக மீண்டும் புதிய பேருந்து நிலையம் வந்தடைந்தது. இபபேரணியில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தென்காசி நெடுஞ் சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு அலகின் கோட்டப் பொறியாளர் திரு.கா.தங்கராஜ், உதவிக் கோட்டப் பொறியாளர் திரு.திருவருள்செல்வன், உதவிப் பொறியாளர்கள் திரு.இராமகிருஷ்ணன், திரு.பாலகணேஷ் மற்றும் நெடுஞ்சாலைத்துறையினைச் சார்ந்த பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டத் தில் தனியார் கல்லூரி களில் படிக்கும் 6,864 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி களை கலெக்டர் தினேஷ் குமார் வழங்கிதொடங்கி வைத்தார்

கிருஷ்ணகிரி, ஜன.30 -

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தனியார் கல்லூரிகளில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கும் நிகழ்ச்சி அரசு மருத்துவ கல்லூரி கலையரங்கில் நடந்தது.



இதில் கலெக்டர் தினேஷ்கு மார், மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் மாணவமாண விகளுக்கு மடிக்கணினி வழங்கி பணியை தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் முதல் கட்டமாக 1,806 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கி னார்கள்.

தொடர்ந்து கலெக்டர் பேசியதாவது: தமிழக முதல் அமைச்சர் அனைத்து துறைகள் சார்ந்த மாணவர்களுக்கு 10 லட்சம் மடிக்கணினி வழங்கும் திட் 5 டத்தை கடந்த 5ந் தேதி தொடங்கி வைத்தார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு கல்லூரிகளில் இறுதி ஆண்டு படிக்கும் 4,522 2 மாணவ, மாணவிகளுக்கு முதல் கட்டமாக மடிக்க ணினி வழங்கப்பட்டது.

தொடர்ந்து தனியார் கல் " லூரிகளில் இறுதி ஆண்டு 5 படிக்கும் 6,864 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கப்படுகிறது. மொத்தம் 11 ஆயிரத்து 386 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி கள் வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

பர்கூர் பொறியியல் கல்லூரி தொடர்ந்து பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி கலையரங்கில் நடந்த நிகழ்ச்சியில் பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் இறுதி ஆண்டு படிக்கும் 225 மாணவ, மாண விகள், பையூர் அரசு தோட் டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு படிக்கும் 70 மாணவ, மாணவிகள் என மொத்தம் 295பேருக்கு மடிக்க ணினிகளை மதியழகன் எம். எல்.ஏ. வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைதிட்ட இயக் குனர் கவிதா, அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் சத்யபாமா, துணை முதல்வர் சாத்வீகா, பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் திருநாவுக்க ரசு, பையூர் அரசு தோட்ட கலை கல்லூரி முதல்வர் அனிசாராணி, உதவிதிட்ட அலுவலர் அருள்மொழி தேவன், பர்கூர் பேரூராட்சி தலைவர் சந்தோஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## காவேரிப்பட்டினம் பேருந்து நிலையம் அருகே கார் ஸ்டாண்டில் பேவர் பிளாக் அமைக்கும் பணி பூமி பூஜை

கிருஷ்ணகிரி, ஜன. 30-

காவேரிப்பட்டினம், பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, காவேரிப்பட்டினம் பேரூராட்சி சார்பில் ரூபாய் 5.90 லட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அருகே உள்ள கார் ஸ்டாண்டில் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு பூமி பூஜை நடைபெற்றது.

இந்த பணியை பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில் குமார் பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார். கார் ஸ்டாண்டில் மண் சாலை மற்றும் குழிகள் காரணமாக ஓட்டுநர்கள் மற்றும் பயணிகள் சந்தித்து வந்த சிரமங்கள் குறித்து பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்த நிலையில், அந்த கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இப்பணி துவங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்புசாரா தொழிலாளர் அணி துணைத் தலைவர் செந்தில்குமார், பேரூராட்சி தலைமை எழுத்தர் வெங்கடாசலம், வார்டு உறுப்பினர்கள் கீதா ஞானசேகர், சோபன் பாபு, சிவா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், காண்ட்ராக்டர் சத்தியமூர்த்தி, திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் கார் ஸ்டாண்ட் ஓட்டுநர்கள் பலரும் நிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்ச்சி தெரிவித்தனர்.

பணி நிறைவடைந்த பின் கார் ஸ்டாண்டு பகுதி சீரான தரைப்பரப்புடன் மேம்படுத்தப்பட்டு, போக்குவரத்து நெரிசல் குறையும் என்றும், வாகன ஓட்டுநர்கள் மற்றும் பயணிகளுக்கு வசதி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தென்னை விவசாயிகள் பயன்பெறும் தேங்காய் கொள்முதல் நிலையம் - காங்கிரஸ் கட்சியின் மாநில விவசாய அணி தலைவர் பவன்குமார் துவக்கிவைப்பு

கிருஷ்ணகிரி, ஜன.30-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகே மிட்டஹள்ளி கிராமத்தில், மறைந்த காங்கிரஸ் தியாகி பி. லோகநாதன் அவர்களின் நினைவாகவும், தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையிலும் அமைக்கப்பட்ட தேங்காய் மற்றும் மாங்காய் கொள்முதல் நிலையம் துவக்க விழா நடைபெற்றது.



இந்த கொள்முதல் நிலையம், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் மாவட்டத் தலைவரும், தற்போதைய காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினருமான எல். சுப்பிரமணியன் அவர்களின் ஏற்பாட்டில் தொடங்கப்பட்டது.

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட தமிழக காங்கிரஸ் கட்சியின் விவசாய பிரிவு மாநில தலைவர் பவன்குமார், விவசாயிகள் பயன்பாட்டிற்காக துவங்கப்பட்ட தேங்காய் மற்றும் மாங்காய் கொள்முதல் நிலையத்தை திறந்து வைத்ததுடன், அன்னதான நிகழ்ச்சியையும் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய பவன்குமார், "கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் விவசாயம் சார்ந்த மாவட்டமாக உள்ளது. இம்மாவட்டத்தில் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில், முன்னாள் மாவட்ட தலைவர் எல். சுப்பிரமணியன் மூலம் இத்தகைய கொள்முதல் நிலையம் துவங்கப்பட்டுள்ளதை திறந்து வைப்பதில் பெருமை கொள்கிறேன்" என்றார்.

மேலும் அவர் கூறுகையில், "அகில இந்திய காங்கிரஸ் தலைவர் வழிகாட்டுதலின் பேரில், தமிழகம் முழுவதும் துடிப்பு மிக்க மாவட்டத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத் தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், தகுதி வாய்ந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு உரிய வாய்ப்புகள் வழங்கப்படும்" என தெரிவித்தார்.

தமிழகத்தில் கூட்டணி குறித்து செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர், "தமிழகத்தில் கூட்டணி தொடர்பான முடிவுகளை அகில இந்திய காங்கிரஸ் கட்சி தான் எடுக்கும். கட்சி மேலிடம் எடுக்கும் எந்த முடிவுக்கும் காங்கிரஸ் கட்சி தொண்டர்கள் அனைவரும் கட்டுப்படுவார்கள். கூட்டணி குறித்து பல்வேறு கருத்துகள் வெளியாவதும் இயல்பானதே. ஆனால், இறுதி முடிவை எடுப்பதில் அகில இந்திய காங்கிரஸ் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது" என கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், காங்கிரஸ் கட்சியின் மாநில செயலாளர் முரளி, திருப்பத்தூர் மாவட்ட முன்னாள் தலைவர் பிரபு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் உறுப்பினர் முத்து, காங்கிரஸ் விவசாய பிரிவு மாவட்ட தலைவர் ராமசந்திரன், கவுன்சிலர் இராதா கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றியத்தில் 100க்கும் மேற்பட்ட ஓபிஎஸ் அணியினர் அதிமுகவில் இணைவு

கிருஷ்ணகிரி, ஜன. 30-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றியத்தில், ஓபிஎஸ் அணியின் கிழக்கு ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் தலைமையில், 100க்கும் மேற்பட்ட ஓபிஎஸ் அணியினர் அதிமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இந்த இணைவு நிகழ்ச்சி, கிழக்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் ஏற்பாட்டில் நடைபெற்றது. அதிமுக துணை பொதுச் செயலாளரும், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.முனுசாமி முன்னிலையில் புதிய உறுப்பினர்கள் அதிமுகவில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில், ஓபிஎஸ் அணி மாவட்ட விவசாய அணி மாவட்ட தலைவர் பலராமன், மாவட்ட திமுக பிரமுகர் முருகன், தொழிலதிபர் தர்மன், ஊர் கவுண்டர் செல்வராஜ், ஒன்றிய மீனவர் அணி செயலாளர் அபிமன்னன், பாஜக ஒன்றிய துணைச் செயலாளர் பலராமன், தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒன்றிய செயலாளர் ராமசாமி உள்ளிட்டோர் முன்னிலையில் இணைவு நடைபெற்றது.

மேலும், சட்டமன்ற உறுப்பினர் அசோக் குமார், இளைஞர் நலன் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம். சதீஷ்குமார், ஒன்றிய செயலாளர்கள் பையூர் ரவி, சைலேஷ் கிருஷ்ணன், மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் கேசவன், பொதுக்குழு உறுப்பினர் வாசுதேவன், ஒன்றிய துணைச் செயலாளர் விக்ரம் குமார், எம்.ஜி.ஆர். இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் கணேசன், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணைத் தலைவர் ஆறுமுகம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திருவரசன், துணைத் தலைவர் ராஜா, பாசறை செயலாளர் மணிகண்டன், குசலன், முனுசாமி, முருகன், திருப்பதி, சாமிநாதன், சுப்பிரமணி உள்ளிட்ட பல்வேறு அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் ஊராட்சி ஒன்றியம், அந்தேரிப்பட்டி ஊராட்சி, சுண்ணாம்பட்டி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக, அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



■ கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில், இந்திய அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மை பாரத் கேந்திரா கிருஷ்ணகிரி சார்பாக நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில், வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து சிறந்த வாசகங்கள் அடங்கிய பதாகைகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திய மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, கிருஷ்ணகிரி மாவட்ட மை பாரத் கேந்திரா துணை இயக்குநர் ட்ரவீன் சார்லஸ்டன், அரசு மகளிர் கலைகல்லூரி முதல்வர் முனைவர்.செள.கீதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## தாம்பரம் அடுத்த கவுரிவாக்கத்தில் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கை வலியுறுத்தி

## 7வது நாளாக 50க்கும் மேற்பட்ட கல்லூரி பேராசியர்கள் இரவிலும் கல்லூரி வளாகத்தில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

தாம்பரம் ஜன.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த கெளரிவாக்கத்தில் உள்ள அரசு உதவிபெறும் கல்லூரியில் பணியாற்றிவரும் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் இணைப்பேராசிரியர்கள், அவர்களுக்குண்டான பணி உயர்வு ஆணைகளைப் பெற்றும், அதற்குண்டான பணப்பலனை தமிழக அரசு இதுநாள்வரை வழங்கவில்லை என கூறி 50க்கும் மேற்பட்ட பேராசியர்கள் கல்லூரி வளாகத்திற்குள் கடந்த 7 நாட்களாக உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக பணி நேரம் முடிந்த நிலையிலும் இரவிலும் இந்த உள்ளிருப்பு போராட்டமானது தொடர்ந்து வருகிறது.

தமிழகம் முழுவதும் சுமார் 200க்கும் மேற்பட்ட தனியார் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசியர்கள் பதவி உயர்வு பெற்றும், அதற்கான பணபலன்களை வழங்கப்படாமல் கடந்த 8 ஆண்டுளாக தமிழக அரசு நிலுவயில் வைத்திருப்பதாகவும், இதனால் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேராசியர்கள் பாதிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டி தமிழக அரசுக்கு எதிராக கோஷஙகளை எழுப்பினர்.




### உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ்
## தனியார் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா வழங்கினார்

கன்னியாகுமரி, ஜன.30-

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் பொன் ஜெஸ்லி பொறியியல் கல்லூரியில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின்கீழ் தனியார் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ் முன்னிலையில் வழங்கி தெரிவிக்கையில்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெற "உலகம் உங்கள் கையில்" என்ற திட்டத்தின் கீழ் அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல், மருத்துவம், விவசாயம், சட்டம், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்துறைப் பயிற்சி போன்ற அனைத்துத் துறைகள் சார்ந்த 10 இலட்சம் மாணவ மாணவியர்க்கு முதற்கட்டமாக மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தினை 05.01.2026 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துவக்கி வைத்தார்கள். அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 12 அரசு கல்லூரிகள் மற்றும் 17 அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் 2,182 மாணவர்களுக்கு முதற்கட்டமாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்தொடர்ச்சியாக 15 அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் 4524 மாணவ மாணவியர்களுக்கு நேற்றையதினம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 128 தனியார் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கும் மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக இன்றையதினம் அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டத்திற்குட்பட்ட லாரன்ஸ் டெக்னிக்கல் டிரெயினிங் சென்டர் 25, பொன் ஜெஸ்லி கல்லூரி 263, ஜெயசேகரன் காலேஜ் ஆப் நர்சிங்கோம் 47, ஸ்ரீ வைகுண்டர் பாலிடெக்னிக் கல்லூரி 28, ஞானதாசன் பாலிடெக்னிக் கல்லூரி 33, சி.எஸ்.ஐ மோட்டார் மெக்கானிக் டிரெயினிங் இன்ஸ்டிடியூட் 7, கிராஸ் காலேஜ் ஆப் நர்சிங் 32, சால்வேஷன் ஆர்மி காலேஜ் ஆப் நர்சிங் 47, ஜெயமாதா பொறியியல் கல்லூரி 104 என மொத்தம் 9 தனியார் கல்லூரிகளில் பயிலும் 586 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்துள்ளார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் பொன் ஜெஸ்லி பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் நடராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மண்டல தலைவர் திரு.செல்வகுமார், பொன் ஜெஸ்லி பொறியியல் கல்லூரி துணை முதல்வர், பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## இரமநாதபுரம் மாவட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், உலகம் உங்கள் கையில் என்னும் மாபெரும் திட்டத்தை முதல் கட்டமாக பத்து லட்சம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வழங்கும் நிகழ்வினை காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்

இராமநாதபுரம், ஜன.30-

இராமநாதபுரம் மாவட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், உலகம் உங்கள் கையில் என்னும் மாபெரும் திட்டத்தை முதல் கட்டமாக பத்து லட்சம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வழங்கும் நிகழ்வினை 5.01.2026 அன்று காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள்.

கல்வி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை ஒருங்கிணைக்கும் நோக்கில் இந்த திட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெற உலகம் உங்கள் கையில் என்னும் அறிவூட்டும் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த திட்டத்தின் முதல் கட்டத்தில் அரசு உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படும். அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், மருத்துவ கல்லூரிகள், வேளாண்மை பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்பயிற்சி நிறுவனங்கள் பயிலும் மாணவர்கள் இந்த திட்டத்தின்கீழ் பயனடைய உள்ளனர். இதன் மூலம் அரசு கல்லூரி மாணவர்களின் கல்வி தரம் மற்றும் தொழில்நுட்ப அணுகல் மேம்படும். அரசு மற்றும் தனியார் கல்லூரி மாணவர்களிடையே காணப்படும் டிஜிட்டல் வசதிகளில் உள்ள இடைவெளியை குறைப்பதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் இருக்கும் மாணவர்கள் தொழில்நுட்ப உலகில் சமமாக முன்னேற வேண்டும் என்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.


உலகம் உங்கள் கையில் திட்டத்தின் மூலம் மடிக்கணினி பெற்ற கல்லூரி மாணவி செல்வி.தனதிவ்யா அவர்கள்

அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இத்திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டு அரசு கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள், பாலிடெக்னிக், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து இறுதி ஆண்டு மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும் வகையில் தொடங்கி வைக்கப்பட்டதன் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு கல்லூரி, அரசு உதவி பெறும் கல்லூரிகள் உள்ளிட்ட கல்லூரிகளைச் சேர்;ந்த 3429 மாணவ, மாணவிகளுக்கு உலகம் உங்கள் கையில் திட்டத்தின்கீழ் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் மடிக்கணினி பெற்ற மாணவி மகிழ்ச்சியுடன் தெரிவிக்கையில், என்னுடைய பெயர் தனதிவ்யா. நான் முதுகுளத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.எஸ்.சி. சி.எஸ். புஜீரிவில் பயின்று வருகின்றேன். என்னுடைய பாடப்பிரிவை பொறுத்தவரை அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகளை நான் உடனுக்குடன் தெரிந்து கொண்டால் எனது கல்வியில் முன்னேற்றம் அடைவதற்கு உதவியாக இருக்கும். கல்லூரி முடிந்தவுடன் அருகில் உள்ள கம்ப்யூட்டர் சென்டருக்கு சென்று கல்வி தொடர்பாக அறிந்து வந்தேன். ஒரு சில நாட்களில் கல்லூரியில் இருந்து சென்றுவர எனக்கு நேரம் இருக்காது. எனது சக தோழிகளிடம் கேட்டு தெரிந்து கொள்வேன். தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உலகம் உங்கள் கையில் என்னும் மாபெரும் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும் என அறிவித்ததை கேள்விப்பட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். இதுகுறித்து எனது பெற்றோரிடம் தெரிவித்தேன். அவர்களும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். தற்போது நான் இத்திட்டத்தின்கீழ் மடிக்கணினி பெற்றுள்ளேன். இனி நான் என்னை கல்வியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வேன். இத்திட்டத்தை அறிவித்து என்னைப் போன்ற மாணவ, மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்கிட இத்திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி பெண் கல்வியை ஊக்குவித்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும் என்னைப்போன்ற மாணவ, மாணவிகள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

## கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கலைஞரின் கனவு இல்லம் திட்ட பயனாளிகள் தேர்வு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, ஜன.30-

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் தோவாளை வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞரின் கனவு இல்லம் திட்டப் பயனாளிகள் தேர்வு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் தேவைகளுக்காக பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில்



ஊரகப்பகுதியில் வசிக்கும் வீடு இல்லாத ஏழை, எளிய மக்கள் பாதுகாப்புடன் வசிக்க வேண்டும் எனவும், அனைவருக்குமே பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்காக கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை அறிவித்து, இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.3.10 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 24.01.2026 அன்று கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 20252026 ஆம் ஆண்டில் கூடுதலாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 2025 2026 ஆம் ஆண்டுக்கு 1000 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்று பயனாளிகள் தேர்வு செய்தல் மற்றும் இலவச பட்டா வழங்குதல் தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்களுடன் தோவாளை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து தோவாளை ஊராட்சி ஒன்றியம், ஈசாந்திமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட ஞானதாசபுரம் குக்கிராமம் மற்றும் அருமநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட அம்பட்டையான் காலனி குக்கிராமங்களில் உள்ள பயனாளிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, தோவாளை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.தங்கராஜ், திரு.கருணாகரன், தோவாளை வட்டார உதவிப் செயற்பொறியாளர் கீதா, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பணி மேற்பார்வையாளர்கள, வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஊராட்சி செயலர்கள் உட்பட கலந்து கொண்டனர்.

## இறங்கி வரும் பெரிய கட்சிகள்... இழுத்தடிக்கும் சிறிய கட்சிகள்!



சென்னை, ஜன.30,-

திமுகவும் அதிமுகவும் கூட்டணிப் பேச்சுவார்த்தைகளை இறுதிப்படுத்தி வரும் நிலையில், "இன்னும் 15 நாட்களில் கூட்டணி முடிவை அறிவிப்பேன்" என்கிறார் கிருஷ்ணசாமி. "கூட்டணி முடிவை அறிவிக்க இன்னும் கால அவகாசம் இருக்கிறது" என்கிறார் பிரேமலதா. "தை மாதத்திற்குள் எனது முடிவை அறிவிப்பேன்" என்கிறார் ஓபிஎஸ். விஜய்யுடன் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடப்பதாகச் சொல்கிறது ராமதாஸ் பாமக.

பொதுவாக தேர்தல் காலம் நெருங்கியதுமே அதிமுக, திமுக என இரண்டு பெரியகட்சிகளுக்கும் சிறிய கட்சிகள் கலந்துகட்டி தங்களது ஆதரவை தெரிவிக்கும். திமுகவும் அதிமுகவும் சிறிய கட்சிகளை தேடிப்போய் பேசியதாக வரலாறு இல்லை.

மாறாக, சிறிய கட்சிகள் தான் தங்களுக்கான 'பங்கைப்' பெற அந்தக் கட்சிகளிடம் தவம் கிடக்கும். அதில் சில கட்சிகளுக்கு 'கேட்டது' கிடைக்கும். சில கட்சிகளுக்கு இதயத்தில் மட்டும் இடம் கிடைக்கும்.

ஜெயலலிதா காலத்தில் சிறு கட்சிகளுக்கும் கூட்டணியில் ஒரு இடமாவது கொடுத்து அவர்களை இரட்டை இலை சின்னத்திலேயே போட்டியிட வைக்கும் வழக்கத்தை உருவாக்கினார். இதை திமுகவும் பின்பற்ற ஆரம்பித்தது. ஆனால் இந்தத் தேர்தலில், பெரிய கட்சிகளின் 'பெரியண்ணன்' பாலிடிக்ஸ் மாறிப் போய் சிறு கட்சிகள் பெரிய கட்சிகளுக்கு டிமாண்ட் வைக்கும் நிலை உருவாகியிருக்கிறது.

ஒட்டுமொத்த பாமகவும் தன்னிடம் இருப்பதாக அன்புமணி சொன்னாலும் அவர் மட்டும் போதாது ராமதாஸ் அணியும் தங்கள் பக்கம் வரவேண்டும் என அவருடன் இன்னமும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது பாஜக. இன்னொரு பக்கம் திமுகவும், தவெகவும் தைலாபுரத்தை வட்டமிடுவதாகச் சொல்கிறார்கள். சுமார் 2 சதவீத வாக்குகள் மட்டுமே வைத்திருப்பதாகச் சொல்லப்படும் தேமுதிக, இன்னமும் கூட்டணி முடிவை தெரிவிக்காத நிலையில், அந்தக் கட்சிக்கு திமுக, அதிமுக, தவெக என மூன்று கட்சிகளின் தரப்பிலும் 'ஆஃபர்' பேசி வருகிறார்கள்.

தனது ஆதரவாளர்கள் எல்லாம் ஒருவர் பின் ஒருவராக உருவிக் கொண்டு ஓடினாலும் ஓபிஎஸ்ஸுக்கும் இன்னும் கிராக்கி குறைந்துவிடவில்லை. அவருக்கு ஆளுநர் பதவி தருவதாக வெல்லாம் பாஜக ஆசைகாட்டுவதாக சொல்கிறார்கள். திமுக தரப்பில், ஓபிஎஸ் மகனுக்கு ராஜ்ய சபா சீட்டும் மூன்று தொகுதிகளும் தருவதாக பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் ஒரு பேச்சு ஓடுகிறது. ஆனாலும் இன்னும் முடிவை அறிவிக்காமல் இழுக்கிறார் பெரியவர் ஓபிஎஸ்.

தவெகவின் வருகையும் ஆட்சியில் பங்கு என்ற அந்தக் கட்சியின் அதிரடிபிரகடனமும் இம்முறை சிறிய கட்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியத்தை பெரிய கட்சிகளுக்கு ஏற்படுத்தி இருக்கிறது. சில நூறு வாக்குகளில் கூட வெற்றி வாய்ப்புகள் தட்டிப் போகலாம் என்பதால் சிறிய கட்சிகளின் வாக்குகளையும் சிந்தாமல் சிதறாமல் தங்கள் பக்கம் கொண்டுவர பெரிய கட்சிகள் பிரயத்தனப்படுகின்றன. இதைப் புரிந்து கொண்டு சிறிய கட்சிகள் நன்றாகவே போக்குக் காட்டுகின்றன.

## முடிச்சூரில் அக்ஷயா அறக்கட்டளையின் வெள்ளி விழா, கலைமாமணி லதா சேதுபதி, கலைமாமணி பூச்சி முருகன் கலந்து கொண்டு விழாவை கௌரவித்தனர்







தாம்பரம் ஜன.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த முடிச்சூரில் அக்ஷயா அறக்கட்டளையின் வெள்ளி விழா நடைபெற்று வருகிறது. வெள்ளி விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கலைமாமணி லதா சேதுபதி, கலைமாமணி பூச்சி முருகன் கலந்து கொண்டு நிகழ்ச்சி துவக்கி வைத்து பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டு மகிழ்ந்தனர். மேலும் முதியோர்களின் சினிமா பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. வெள்ளி விழா முன்னிட்டு மருத்துவ முகாம் மற்றும் விழா வளாகத்தில் கிளிசோசியம், மெகந்தி உள்ளிட்ட ஸ்டால் அமைத்துள்ளனர். வெள்ளி விழாவில் கோபாலன் லலிதா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தாமோதரன், 400 க்கும் மேற்பட்ட முதியோர்கள் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் உட்பட ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்த்தித்து பேசிய அக்ஷயா அறக்கட்டளையின் நிறுவனர் கோபாலன் பேசுகையில் நன்கொடையாளர்களுக்கு நன்றி சொல்லு விதமாக ஆண்டுதோறும் இந்த விழா நடைபெறுகிறது. எங்கள் அறக்கட்டளையில் 400 முதியவர்கள் உள்ளனர் ஒவ்வொரு முதியவருக்கும் 10 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. இவர்களுக்கு மருத்துவ செலவு, ஆபரேஷன், இறுதியில் அவர்களின் ஈம்ச்சடங்கு உள்ளிட்ட அனைத்தும் நாங்கள் செய்து வருகிறோம் இதற்கு எங்களுக்கு உருதுனையாக இருக்கும் நன்கொடையாளர்களுக்கு எங்கள் மன்மார்ந்த நன்றி எனவும் மேலும் இந்த அறக்கட்டளை முலமாக ஆங்கில பள்ளி தொடஙகபட்டுள்ளது. இந்த ஆங்கில பள்ளியில் படிக்க இயலாதவதர்களை சேர்ந்து படிப்பதற்கும், +2 போன்ற மாணவர்கள் படிப்பு செலவுக்கு உதவி செய்வதாகவும் அவர் கூறினார்.



■ திருப்பூர் மாவட்டம் மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 29.01.2026வியாழக்கிழமை அன்று மின்னணு வேளாண் சந்தை (eNAM) திட்டத்தின் கீழ் பருத்தி விற்பனை நடைபெற்றது. இதில் திருப்பூர் கரூர் திருச்சி திண்டுக்கல் ஈரோடு,கோவை மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் 51 நபர்கள் பருத்தி கொண்டு வந்திருந்தனர். பருத்தியினை கொள்முதல் செய்ய திருப்பூர், திண்டுக்கல் ஈரோடு,சேலம் கோவை மாவட்டங்களை சேர்ந்த வணிகர்கள் மறைமுக ஏலத்தில் பங்கேற்றனர். வணிகர்களால் அதிகபட்ச விலையாக குவிண்டால் ஒன்றிற்கு ரூபாய்.8311 ற்கும் குறைந்தபட்சவிலை ரூபாய்.6500 ற்கும் சராசரி விலை ரூ 7250 ற்கும் விற்பனையானது. பருத்தியின் மொத்த அளவு 616மூட்டைகள் , குவிண்டால் 220.34 மதிப்பு ரூபாய் 16,02,899.19/ மேற்கண்ட விவரங்களை திரு. சண்முகசுந்தரம், வேளாண்மை துணை இயக்குநர்/ செயலாளர், திருப்பூர் விற்பனைக்குழு தெரிவித்தார். ஏலத்திற்கான ஏற்பாடுகளை கண்காணிப்பாளர் மாரியப்பன் செய்திருந்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161